

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 13.02.2026 அன்று தலைமைச் செயலகத்தில், தொல்லியல் துறை சார்பில் தமிழ்நாட்டின் வைகை நதிக்கனரயில் சங்ககால நகர நாகரிகத்தின் ஆய்வுக்கூடமாக விளங்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க கீழடி தொல்லியல் தளத்தினை உலகத் தமிழர்கள், அறிஞர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கண்டு தமிழ்நாட்டின் தொன்மையை அறிந்துகொள்ளும் வகையில் சுமார் 4.5 ஏக்கர் பரப்பளவில், இரண்டு காட்சிகூடங்களுடன் 24 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள கீழடி திறந்தவெளி அருங்காட்சியகத்தை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், கீழடியிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக நிதி மற்றும் சுற்றுச்சூழல் – காலநிலை மாற்றம் மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், சட்டமன்ற உறுப்பினர் திருமதி தமிழரசி, சிவகங்கை மாவட்ட வருவாய் அலுவலர் மரு.செல்வசுரபி. உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். நா. முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா,சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் / தொல்லியல் துறை ஆணையர் த. உதயச்சந்திரன், தொல்லியல் துறை அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருவெறும்பூர் வேங்கூர் ஊராட்சியில்

# ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ சிறப்பு மருத்துவ முகாம்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார்!

திருவெறும்பூர் , பிப். 16 -

திருவெறும்பூர் அருகே வேங்கூர் ஊராட்சியில் உள்ள தனியார் பள்ளியில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை சார்பில் நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாமை தமிழக பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார்.





ஏழை எளிய பொதுமக்கள் தங்களுக்கு தேவையான மருத்துவ வசதிகளை பெறுவதற்கும் ஏதுவாக தமிழக முதல்வர் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மூலம் நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாமை தமிழகம் முழுவதும் நடத்த அறிவுறுத்தி உள்ளார் அதன் படி நடத்தப்படும் மருத்துவ முகாம்களில் அந்த பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அனைத்து விதமான மருத்துவர்களை கொண்டு பொதுமக்களுக்கு தேவையான மருத்துவர் பரிசோதனை ஆலோசனை மற்றும் மேற்சிகிச்சை க்கான பரிந்துரைகளும் செய்யப்படுகின்றனர். அதன் அடிப்படையில் திருவெறும்பூர் அருகே வேங்கூர் ஊராட்சிக்கு உட்பட்ட தனியார் பள்ளியில் நடந்த மருத்துவ முகாமை தமிழக பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார்.

இந்த முகாமில் பொது மருத்துவம், காது, மூக்கு ,தொண்டை, இதயவியல், கண், பல், மனநலம், உள்ளிட்ட 17 வகையான மருத்துவ துறையைச் சேர்ந்த மருத்துவர்கள் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு மருத்துவ ஆலோசனை பரிசோதனை மற்றும் வேர் சிகிச்சைக்கான அறிவுரைகளை வழங்கினர்.

இந்த நிலையில் முன்னதாக முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு கால பெட்டகம் 12 பேருக்கும், மருத்துவ காப்பீடு திட்ட அட்டை 5 நபர்களுக்கும் , தொழு நோயாளி பாது காப்பு பெட்டகம் ஒருவருக்கும் வழங்கப்பட்டது.

இந்த முகாமில் திருவெறும்பூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஆனந்தகுமார், அண்ணாதுரை, வடக்கு ஒன்றிய செயலாளர் கருணாநிதி , தனியார் பள்ளியின் தலைமை ஆசிரியர் பகவதி அப்பன்,வட்டார சுகாதார மேற்பார்வையாளர் சதானந்தம், சுகாதார ஆய்வாளர்கள் சங்கர், குமார், கோபாலகிருஷ்ணன் பலரும் கலந்து கொண்டனர்.



சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி ஊராட்சி ஒன்றியம், நிலவாரப்பட்டியில் நேற்று (15.02.2026) நடைபெற்ற ஜல்லிக்கட்டுப் போட்டியினை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி தலைமையில், சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தொடங்கி வைத்தார். உடன் சேலம் வருவாய் கோட்டாட்சியர் உதயகுமார், கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் மரு அரங்க பிரகாசம், சேலம் வட்டாட்சியர் பார்த்தசாரதி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 73வது பிறந்தநாளை முன்னிட்டு, கரூர் சட்டமன்ற தொகுதி, கரூர் வடக்கு பகுதி கழகம் சார்பில், மாநில அளவில் பெண்களுக்கும், மாவட்ட அளவில் ஆண்களுக்குமான மாபெரும் கபாடி போட்டி, கரூர் மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ வழிகாட்டுதலில் நடைபெற்று வருகிறது. ரூ. 523168/ மதிப்பிலான மொத்த பரிசுத்தொகை மற்றும் கோப்பைகளுக்காக நடைபெறும் இப்போட்டிகளில் நூற்றுக்கணக்கான அணிகள் பங்கேற்க மாலை இரவு ஆட்டங்களாக நடைபெறுகிறது.



திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரகத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் சார்பில் தாய்சேய் நலனை மேம்படுத்தும் வகையில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு நிகழ்வில் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு , தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகியோர் கலந்து கொண்டு 100 கர்ப்பிணி பெண்களுக்கு தட்டு, மஞ்சள், குங்குமம், பூ, பழம் மற்றும் பொன்னான ஆயிரம் நாட்கள் குறித்த மடிப்பேடு அடங்கிய மங்களப் பொருட்களை வழங்கி வாழ்த்தினார்கள். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன். மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன், மாவட்ட வருவாய் அலுவலர் ஆர்.பாலாஜி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி. கங்காதாரிணி, மாவட்ட நகர் ஊரமைப்பு குழு உறுப்பினர் வைரமணி, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட அலுவலர் திருமதி.மா.நித்யா, வட்டார குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் மண்டலத்தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 73வது பிறந்த நாளை முன்னிட்டு புதுக்கோட்டை தெற்கு திருமயம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் மாநில அளவிலான கைப்பந்து போட்டி திருமயம் ஒன்றிய தி.மு.க. சார்பில் முதல் போட்டியினை அமைச்சர் எஸ்.ரகுபதி தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் தெற்கு ஒன்றிய செயலாளர் அழகு சிதம்பரம், சிறுபான்மை அணி ஜான் பீட்டர், மாவட்ட பிரதிநிதிகள் சீமானூர் கணேசன், துரைராஜா, ரமேஷ், விவசாய அணி சிவகுமார், மாவட்ட துணை அமைப்பாளர் மாரிமுத்து, தொண்டரணி சாமி சுரேஷ், விளையாட்டு மேம்பாட்டு அணி நீலமேகம் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள், ரசிகர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### “உள்நாட்டு உற்பத்தி பேசும் ஒன்றிய அரசு, கப்பல் கட்டுமானத்தை வெளிநாடுகளிடம் ஒப்படைத்ததா?”

# இந்திய “கப்பல் கட்டுமானத்தில் வெளிநாட்டு இறக்குமதி பிடியில் இந்தியா உள்ளதா?

## மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கேள்வி!

புதுடெல்லி, பிப். 16 –

டெல்லியில் பாராளுமன்ற மாநிலங்களவை ஓட்டத்துடன் நடைபெற்று வருகிறது. இக்கூட்டத்தில், நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினர் கேஆர்.என்.இராஜேஸ்குமார், இந்திய ”கப்பல் கட்டுமானத்தில் வெளிநாட்டு இறக்குமதி பிடியில் இந்தியா உள்ளதா? உள்நாட்டு உற்பத்தி பேசும் ஒன்றிய அரசு, கப்பல் கட்டுமானத்தை வெளிநாடுகளிடம் ஒப்படைத்ததா? என மாநிலங்களவையில் ஒன்றிய அரசை கடுமையாக கேள்வி எழுப்பினார்.



நேரமில்லா நேர கேள்வி நேரத்தில், ”கப்பல் கட்டுமானத்திற்கு தேவையான கடல்தர எஃகு, இயந்திர இயக்க அமைப்புகள் (Propulsion Systems), வழிநடத்தல் உபகரணங்கள் உள்ளிட்ட கூறுகளில் இந்தியா எவ்வளவு அளவு இறக்குமதிகளை சார்ந்துள்ளது? கடந்த ஐந்து ஆண்டுகளில் அதன் அளவு மற்றும் மதிப்பு என்ன? இந்திய ”கப்பல் கட்டுமானத்தில் வெளிநாட்டு இறக்குமதி பிடியில் இந்தியா உள்ளதா? உள்நாட்டு உற்பத்தி பேசும் ஒன்றிய அரசு, கப்பல் கட்டுமானத்தை வெளிநாடுகளிடம் ஒப்படைத்ததா??

இந்த கூறுகளின் உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்க மத்திய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? என அவர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழித் துறை அமைச்சர் சர்பானந்த சோனோவால்,, இந்தியாவின் கப்பல் கட்டுமானத் துறையில் பயன்படுத்தப்படும் கூறுகளுக்கான இறக்குமதி சார்பு குறித்து இந்திய அரசு மதிப்பீடு செய்துள்ளது.

சில கப்பல் கட்டுமான கூறுகளுக்கான தேவைகளை உள்நாட்டு உற்பத்தியாளர்கள் தற்போது பூர்த்தி செய்து வருகின்றனர்.

ஆனால், கடல் இயந்திரங்கள் (Marine Engines), இயந்திர இயக்க அமைப்புகள் (Propulsion Systems), வழிநடத்தல் உபகரணங்கள் (Navigation Equipment) போன்ற சில முக்கிய கூறுகளுக் காக இந்தியா இன்னும் இறக்குமதிகளை சார்ந்துள்ளது.

இது தொடர்பாக, கொச்சின் கப்பல் கட்டுமான நிறுவனம் (Cochin Shipyard Limited – CSL) மூலம் கடந்த ஐந்து ஆண்டுகளில் (2021 முதல் 2025 வரை) மேற்கொள்ளப்பட்ட இறக்குமதிகளின் அளவு மற்றும் மதிப்பு விவரங்கள் அனெக்சர் – Iல் இணைக்கப்பட்டுள்ளது. . கப்பல் கட்டுமான நிதி உதவி திட்டம் (SBFAS), மேலும், கப்பல் கட்டுமானத் துறையில் உள்நாட்டு உற்பத்தி மற்றும் கப்பல் கட்டுமான கூறுகளின் கொள்முதலை ஊக்குவிக்கும் நோக்கில், கப்பல் கட்டுமான நிதி உதவி திட்டம் (Shipbuilding Financial Assistance Scheme – SBFAS) அமல்படுத்துவதற்கான வழிகாட்டுதல்களை மத்திய அரசு சமீபத்தில் வெளியிட்டுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ்:

40 சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட உள்நாட்டு உள்ளடக்கம் கொண்ட கப்பல்களுக்கு முழு நிதி உதவி வழங்கப்படும்.30 சதவீதம் முதல் 40 சதவீதத்திற்கு குறைவான உள்நாட்டு உள்ளடக்கம் கொண்ட கப்பல்களுக்கு விகிதாசார அடிப்படையில் நிதி உதவி வழங்கப்படும். 30 சதவீதத்திற்கு குறைவான உள்நாட்டு உள்ளடக்கம் கொண்ட கப்பல்களுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் எந்த நிதி உதவியும் வழங்கப்படாது.

கொச்சின் கப்பல் கட்டுமான நிறுவனம் (CSL) – கடந்த 5 ஆண்டுகளின் இறக்குமதி விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த வழிகாட்டுதல்கள் மூலம், உள்நாட்டு கப்பல் கட்டுமானத் துறையை வலுப்படுத்தவும், உள்நாட்டு கூறுகளின் பயன்பாட்டை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அமைச்சர் சர்பானந்த சோனோவால் தெரிவித்தார்.




ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதி சார்பில் ”தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரை பொதுக்கூட்டம் மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஏற்பாட்டில் ஜெயங்கொண்டம் ஒன்றியம், கழுவந்தோண்டி தலைவர் கலைஞர் திடலில் நடைபெற்றது.இக்கூட்டத்தில் கழக கொள்கை பரப்பு செயலாளர் முனைவர் இரா.தி.சபாபதி மோகன் சிறப்புரையாற்றினார். உடன் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணை செயலாளர் சுபா. சந்திரசேகர், தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன், அரியலூர் சட்டமன்ற தொகுதி மேற்பார்வையாளர் ப. அன்பரசு,மாவட்ட துணை செயலாளர் மு.கணேசன், ஒன்றிய பொறுப்பாளர் தனசேகர், நகர செயலாளர் வெ.கொ.கருணாநிதி, ஒன்றிய பொறுப்பாளர் ஆர்.கலியபெருமாள் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்துகொண்டனர்.